# <u>செய்தி வெளியீடு</u>

**செ.வெ. எண். 11** **நாள். 08.12.2017**

**இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, நடைபெறவுள்ள எண்.11, டாக்டர்.இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல்–2017யை முன்னிட்டு, ஊடக நிறுவனங்களை சார்ந்தவர்களுடனான ஊடக சான்று மற்றும் கண்காணிப்புக் குழு கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் நடைபெற்றது.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, நடைபெறவுள்ள எண்.11, டாக்டர்.இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல்–2017யை முன்னிட்டு, தேர்தல் நன்னடத்தை விதிகள் குறித்து ஊடகச் சான்று மற்றும் கண்காணிப்புக் குழுவின் சார்பில் அனைத்து ஊடக நிறுவன அலுவலர்களுடனான கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் இன்று (08.12.2017) ரிப்பன் மாளிகையில் நடைபெற்றது.

எண்.11, டாக்டர். இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற தொகுதிக்கு இடைத்தேர்தல் வருகின்ற 21.12.2017 அன்று நடைபெறவுள்ளது. இந்த தேர்தலில் ஊடகங்களை கண்காணித்து அதில் வேட்பாளர்கள் சார்பாக வரும் விளம்பரத்திற்கான செலவுகளை வேட்பாளர்களின் தேர்தல் செலவுக் கணக்கில் கொண்டுவர இந்திய தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

ஊடகங்களில் மேற்கொள்ளப்படும் விளம்பரங்களுக்கு சான்றளிக்க மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆணையாளரை தலைமையாக கொண்ட சான்றளிக்கும் குழு ஒன்று ரிப்பன் மாளிகையில் இயங்கி வருகிறது. அதற்கான விண்ணப்பப்படிவ நகலை மக்கள் தொடர்பு அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும் அல்லது பெருநகர சென்னை மாநகராட்சியின் இணையதளத்தில் மேற்காணும் விண்ணப்பப் படிவத்தினை பதிவிறக்கம் செய்து கொள்ளவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், செய்தியாக வெளிவரும் வேட்பாளர் சார்ந்த செய்திகள், வீடியோ படக்காட்சிகளை பணம் கொடுத்து வரவழைக்கப்பட்ட செய்தியா என கண்டறிந்து, அதனையும் வேட்பாளர்களின் தேர்தல் செலவுக் கணக்கில் கொண்டுவர இந்திய தேர்தல் ஆணையம் கோரியுள்ளது.

இவ்வினம் தொடர்பாக ஊடகச் சான்று மற்றும் ஊடக கண்காணிப்புக் குழு (Media Certification and Monitoring Committee) ஒன்று அமைத்து ஊடகங்கள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

வேட்பாளர்களுக்கு சாதகமான செய்தி மட்டுமின்றி, ஒரு வேட்பாளரை பற்றி தவறாக ஏதேனும் செய்திகள் வரப்பெறின், அவையும் கண்காணிப்பு குழுவினால் ஆய்வு செய்யப்படும். அரசியல் கட்சியினரால் நடத்தப்படும் தொலைக்காட்சி மற்றும் வானொலி சேவைகளுக்கும் இது பொருந்தும்.

மேற்படி குழுவினரால் கண்டறியப்பட்ட விளம்பரங்கள் மற்றும் பணம் கொடுத்து வரவழைக்கப்பட்ட செய்தி என்று சந்தேகப்படும் இனங்கள் யாவும் இடைத்தேர்தல் நடைபெறும் சட்டமன்ற தொகுதியின் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வழங்கப்படும்.

விளம்பரங்களுக்கான விலைப்பட்டியல்கள் பெருநகர சென்னை மாநகராட்சியின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. தேர்தல் நடத்தும் அலுவலர் சம்பந்தப்பட்ட வேட்பாளருக்கு உரிய நோட்டீஸ் சார்வு செய்து, 48 மணி நேரத்தில் வேட்பாளரின் பதிலினை பெற்றபின், தேர்தல் செலவு கணக்கு முடிவு செய்யப்படும்.

இந்த முடிவின் மீதான மேல்முறையீடு ஏதேனுமிருப்பின் தலைமைத் தேர்தல் அலுவலரை அணுகலாம். மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் 1951 பிரிவு 127 A–யின் படி ஊடகங்கள்/பதிப்பீட்டாளர்கள் தாங்கள் அச்சிடும்/வெளியிடும் தேர்தல் விளம்பரங்கள் மற்றும் துண்டு பிரசுரங்கள்/வெளியீடுகளில் பதிப்பீட்டாளர் பெயர் மற்றும் அச்சிடுபவர் பெயர் முகவரி ஆகிய விவரங்களை குறிப்பிட வேண்டும்.

மேலும், இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி, தேர்தல் நாளான 21.12.2017க்கு முந்தைய 48 மணி நேரத்தில் மேற்படி ஊடக சான்றளித்தல் குழுவிடம் சான்று பெறாமல் எந்தவொரு விளம்பரமும் அச்சடிக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது. (இந்திய தேர்தல் ஆணைய கடித எண்: 491/MCMC/2016, நாள்: 14.05.2016)

இந்தக் கூட்டத்தில், மாவட்ட கூடுதல் தேர்தல் அலுவலர்கள்/துணை ஆணையாளர்கள் திருமதி.ஆர்.லலிதா, இ.ஆ.ப., திருமதி.எம்.விஜயலட்சுமி, இ.ஆ.ப., திருமதி.மகேஸ்வரி ரவிக்குமார், இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.டி.ஜெயசீலா, ஊடகச் சான்று மற்றும் கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள், ஊடக நிறுவனங்களைச் சார்ந்தவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**